திண்டிவனத்தில் திருப்பாவை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D P.F.

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனிமீ 7உ திங்கள் (21—6—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனிமீ 8உ செவ்வாய் (22—6—54) | இதழ்: 6

பாகிஸ்தானில் சர்வாதிகாரம் —

கிழக்கு வங்கம் சிறைக்கூடமாகிறது!

இதுவரை 33 எம். எல். ஏ.-க்கள் கைது

கபார்கான் கண்டிக்கிறார்

டாக்கா, ஜூன் 20—

கிழக்கு வங்கத்தில் இதுவரை 33 சட்டசபை உறுப்பினர்கள் உள்பட 1051 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

கவர்னர் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து கைது செய்யப்பட்டவர்களில் இரு கல்லூரிப் பேராசிரியர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் உள்ளனர். 48 பேரை சர்க்கார் விடுதலை செய்திருக்கிறது என்று தெரிகிறது.

ஆதம்ஜி மில் பகுதியில் நடைபெற்ற கலவரத்தை ஒட்டி டாக்கா நகரில் போடப்பட்ட 144 தடை உத்திரவு மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

கபார்கான் கண்டிக்கிறார்

பாகிஸ்தான் செய்தி இலாகா அமைச்சர் சர்தார் பகதூர் கான் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், சிறையிலிருந்து விடுவிக்கும் முன்பாக அமைச்சர் அளித்த வாக்குறுதிகளை நினைவூட்டியும், அவைகளை உடனே நிறைவேற்ற வேண்டுமென்றும், பகதூர் கானுக்கு எல்லை காந்தி கான் அப்துல் கபார் கான் கடிதமொன்று எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது.

ஆறு ஆண்டு கால சிறைவாசத்திற்குப் பின் விடுதலை செய்யப்பட்டாலும், கபார்கான் வடமேற்கு எல்லைப்புற மாகாணமான தனது சொந்த மாகாணத்தில் நுழையக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

கபார்கானின் செஞ்சட்டைப் படைமீதும் தடை உளளது.

பாக் அமைச்சர் தனக்கு என்ன வாக்குறுதிகளைத் தந்தார் என்பதை வெளியிட கபார் கான் மறுத்துவிட்டார்.

டில்லி தர்பார் தரும் உரிமை!

சென்னையையும் கலந்ததாம்

ஐவர் பயணம் ஆரம்பம்

"சென்னைக்கு சர்க்கார் அதிகாரி ஒருவரை அனுப்பி, இலங்கை-இந்தியப் பிரச்சினையை ஆராய இந்திய சர்க்கார் முனைந்தது பெரியதோர் செய்கையாகும். ஏனெனில், இப்பிரச்சினை சென்னை சர்க்காருடன் கலந்தாலோசிக்க வேண்டியது என்பதை இதுவரை மத்திய சர்க்கார் உணர்ந்ததே இல்லை!"

—இவ்வாறு, சென்னையிலிருந்து கொழும்பு திரும்பிய இலங்கை-இந்திய வர்த்தக சங்கத் தலைவர் கே. ஜி. ராவ் கூறினார்.

ஜூலை 24-ல் கொழும்புக்கு விஜயம் செய்யும்போது இந்தியர்கள் சார்பில் தூதுக் குழு ஒன்றைச் சந்திக்க இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது.

கே. ஜி. ராவ், சென்னை சர்க்காருடனும், இந்திய நிதி அமைச்சருடனும் சென்னையில் இலங்கை இந்தியர் நிலைமை பற்றிப் பேசினாராம்.

சென்னை தமிழ் நாடு காங்கிரசின் சார்பில் ஐந்து பேர் கொண்ட தூதுக் குழு ஒன்று

(1-ம் கலம் பார்க்க)

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

என். எஸ். கரையாளர் தலைமையில் இலங்கையில் ஜூலை 5-ந் தேதி முதல் 10-ந் தேதி வரையில் சுற்றுப் பயணம் செய்யுமென்று தெரிகிறது.

இக்குழுவினர், இலங்கையில் வாழும் நாடற்ற இந்தியர்களின் நிலைமை பற்றியும், இலங்கையில் குடி உரிமை பெற்ற இந்தியர்களின் நிலைமை பற்றியும் நேரில் கண்டறியும் என்று தெரிகிறது.

குவாடிமாலாவில் கொந்தளிப்பு

அமெரிக்காவின் சூழ்ச்சி என சோவியத் குற்றச்சாட்டு!

ஐ. நா. பாதுகாப்பு சபையில் பரிசீலனை

மெக்சிகோ, ஜூன் 20—

குவாடிமாலாவில் கம்யூனிச சர்க்காரை எதிர்த்துப் படையெடுத்த கம்யூனிச எதிர்ப்புப் படை 30 மைல் தூரம் சென்றுவிட்டது என அறிவிக்கப்படுகிறது.

குவாடிமாலாவின் முக்கியப் பிரதேசமான சகாபாவை நோக்கி எதிர்ப் படைகள் செல்கின்றன.

இப்படையெடுப்புக்குக் காரணம் அமெரிக்காவின் சூழ்ச்சி என்றும், குவாடிமாலாவில் நிலப் பிரபுத்துவத்தைக் காக்கவும், உழவர்களை அடக்கவுமே அமெரிக்கா இந்தப் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தது என்றும் மாஸ்கோ ரேடியோ அமெரிக்கா மீது குற்றம் சாட்டியது.

குவாடிமாலாவில் மக்கள் எழுச்சி ஏற்பட்டிருப்பதாகவும், ஆட்சியில் இருக்கும் கம்யூனிஸ்டு சர்க்காரை எதிர்த்து 'விடுதலைச் சேனை' முன்னேறுகிறது என்று அமெரிக்க செய்திகள் கூறுகின்றன.

குவாடிமாலா நகரமும், ஜனாதிபதியின் அரண்மனையும் விமானத் தாக்குதலுக்கு உள்ளாயின என்று தெரிகிறது.

குவாடிமாலா விமானப் படையின் முன்னாள் தலைவரும், தற்போது ஆட்சி செய்யும் சர்க்காரால் நாடு கடத்தப்பட்டவருமான கர்னல் காஸ்டில்லோ தலைமை வகிக்கிறார்.

★

ஐ. நா. சபையில் புகார்

குவாடிமாலாவின், திட்டமிட்டபடி ஹாண்டுராசும், நிகராகுவாவும் படையெடுத்திருக்கிறது; அதுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்பு சபையிடம் குவாடிமாலா சர்க்கார் புகார் ஒன்று தாக்கல் செய்து பார்வையாளர்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டிருக்கிறது.

மந்திரிக்கு அர்ச்சனை! மற்றவருக்கு சாபம்!!

காங்கிரசில் சேருவதாகத் தீர்மானம் இல்லை!

ஜில்லா போர்டு தேர்தல் தீர்மானமும் இல்லை!

தி. மு. க., கம்யூனிஸ்டு கட்சி மீது கடும் தாக்குதல்

★

திண்டிவனத்தில் மந்திரி ராமசாமியாரின் ஆதரவாளர்கள் நடத்திய வன்னியர் மாநாட்டில், மந்திரிக்குப் பாராட்டுதலைச் சொரிந்து பலரும் பேசினர்.

1. அவர் காங்கிரசில் சேர்ந்துவிடவில்லை.
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பாரின் நன்மைக்காகவே அவர் மந்திரியானார்.
3. அவர் மந்திரியாவதற்கு முன்பு, குலப் பெரியோர்களையும், எம். எல். ஏ.-க்களையும் கலந்து பேசிச் சம்மதம் பெற்றே, மந்திரி வேலையை ஒத்துக் கொண்டார்.

இந்த மூன்று காரணங்களைக் காட்டியே, அவர் செய்கையைப் பலரும் ஆதரித்துப் பேசினர்.

காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துவிட வேண்டும் என்று ஒரே அடியாகப் பேச, யாரும் முன்வரவில்லை.

வன்னியர், மற்றுமுள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தார் வளர்ச்சியடைய, மந்திரிப் பதவி பயன்படும் என்று பேசப்பட்டது.

வன்னியர் காங்கிரசில் சேர்ந்தால் தான் முன்னேற்றம் காணலாம் என்று வெளிப்படையாகப் பேச யாரும் முன்வரவில்லை.

வன்னிய மக்களின் முன்னேற்றத்தை, மந்திரியாகிவிட்ட ராமசாமியார் கவனித்துக் கொள்வார்; ஆகவே, வன்னியர் முன்னேற்றத்துக்காக, உழைப்பாளர் கட்சி என்று தனியாக ஒரு கட்சி எதற்கு? —என்ற பிரச்சினை கவனிக்கப்படவே இல்லை.

உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிடப் போவதாக காங்கிரஸ் தலைவரிடம் கனம் ராமசாமி வாக்களித்திருப்பதாக காங்கிரஸ் வட்டாரத்தில் பேசப்பட்டது; ஆனால், மாநாட்டில் இது குறித்து பேச்சே எழவில்லை.

கனம் ராமசாமி மந்திரியானதை ஆதரிக்கப் பலர் கூடினர் என்பது தெரிந்ததே தவிர, மாநாடு, எந்த ஒரு குறிப்பிட்ட கொள்கை விளக்கமோ, திட்டமோ தரவில்லை.

ஜில்லா போர்டு தேர்தல் சம்பந்தமான தீர்மானம், மாநாட்டில் கொண்டுவரப்படுவதாக இருந்தது; ஆனால், அந்தத் தீர்மானமும் கைவிடப்பட்டு விட்டது.

மாநாட்டில், காங்கிரசல்லாதாரே, பெரும்பாலும் கூடி இருந்தனர்.

திராவிட சட்டசபைக் கட்சியினரும் கூடி, மந்திரிக்கு அர்ச்சனை வழங்கினர்.

கனம் ராமசாமி, காங்கிரசில் சேரவில்லை என்பதை எடுத்துக் காட்டவே, மேற்படி மாநாட்டில் தாங்கள் கலந்து கொள்வதாக அவர்கள் கூறினர்.

பொதுவாக, இரண்டு முக்கியமான காரியத்தை மாநாடு கவனித்தது.

(1) மந்திரிக்கு அர்ச்சனை.

(2) மற்றவருக்குச் சாபம்.

மந்திரியும், அவருடைய ஆதரவாளர்களும், தங்கள் முழுக் கோபத்தையும் தி. மு. கழகத்தின் மீதும், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., மீதும் செலுத்தினர்.

தி. மு. கழகத்தைத் தாக்குவதில், ஓராண்டுக் காலமாகவே பயிற்சி பெற்றுள்ள தோழர் கே. விநாயகம் எம்.எல்.ஏ., இந்த மாநாட்டில், தி. மு. கழகத்தைத் தாக்கிப் பேசுவதில் முதல் பரிசு பெற்றார்!!

"கம்யூனிஸ்டு கட்சியையும், தி. மு. கழகத்தையும் ஒழித்துக் கட்டி விடுவோம்" என்று மந்திரியும், ஆதரவாளரும் பேசினர்.

இவ்வளவு ஆத்திரம் பொங்கப் பொங்கப் பேசும் அன்பர் ராமசாமி, அன்று மாணிக்கவேலர் மந்திரியானபோது, தி. க.; தி. மு. க.; கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றுடன் கூடிக்கொண்டு, மாணிக்கவேலரை, 'குலத் துரோகி' என்று கண்டித்து, கொடும்பாவி கட்டி இழுக்க வேண்டுமென்று பேசவில்லையா! அப்போது ஒரு பேச்சு, இப்போது ஒரு பேச்சா! இது என்ன நியாயம்!—என்று மாநாட்டிலே கூடியிருந்த மக்கள் பேசிக் கொண்டனர்.

உழைப்பாளர் கட்சியைக் கலைத்துவிடவும், வன்னிய மக்களைக் காங்கிரசிலே சேர்ந்துவிடும்படி கேட்டுக் கொள்ளவும், கூட்டப்பட்ட மாநாடு, நிலைமை சாதகமாக இல்லை என்ற காரணத்தால் மந்திரியைப் பாராட்டவும், மற்றவர்களைச் சபிக்கவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது!

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 21—6—54 திங்கள்

ஒத்திவைக்கப்பட்டது!

இந்தோ - சீனாவின் ஒரு பகுதியான வியட்-நாம் பிரதேசத்தில் நடைபெற்று வரும் உள்நாட்டு விடுதலைப் போரையும், மற்ற இரு பகுதிகளான லாவோஸ், கம்போடியா பிரதேசங்களின் எதிர்காலத்தையும் குறித்து, நிர்ணயம் செய்வதற்காக, ஒன்பது நாட்டுப் பிரதிநிதிகள், ஜெனிவாவில் கூடினர். அம்மாநாடு, பல திங்கள் வரை நீடித்தாலும் நீடிக்கக்கூடுமென, துவக்கத்திலேயே அறிவிக்கப்பட்டும் இருந்தது.

மாநாடு துவங்கியதும் பேசப்பட்ட பேச்சுவார்த்தைகள், மாநாட்டில் கலந்து கொண்டிருந்த அமெரிக்கப் பிரதிநிதிக்கு எரிச்சல் மூட்டுவதாக இருந்தது. எனவே மிக்க சீற்றங் கொண்டவராய் அந்த அமெரிக்கப் பிரதிநிதி வீடு திரும்பிவிட்டார். அவருக்குப் பதிலாக, வேறு ஒருவர் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

மாநாடு துவங்கி, எட்டு வாரங்கள் சென்றதும், மாநாட்டில் பங்கு கொண்ட பிரிட்டிஷ் பிரதிநிதியான அந்தோனி ஈடன், பிரச்னையைச் சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்கு எந்தவித உருப்படியான உடன்பாடும் ஏற்படப்போவதில்லை என மனமுடைந்து குறிப்பிட்டார். மாநாடு தோற்றுவிட்டது என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டாக வேண்டும் எனவும் அவர் சலிப்படைந்து கூறினார்.

கம்யூனிஸ்டு சார்பு நாடுகள் கொடுத்த திட்டத்தை ஒப்புக்கொள்ள மறுத்து, வேறு ஒரு திருத்தத் திட்டத்தை அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் தருவதும், அதை ஏற்றுக்கொள்ள மறுத்து, மாறுபட்ட திட்டமொன்றை பொதுவுடைமை நாடுகள் தருவதுமாக, மாநாடு நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.

இந்தோ-சீன எதிர்காலம் பற்றி ஜெனிவாவில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்பொழுதே, வியட்மின் விடுதலைப் படை, தீவிரமாகப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவந்தன. பிரெஞ்சுத் துருப்புகளும், அமெரிக்க ஆயுத உதவியுடன் சுதந்திரப் படையை எதிர்த்துப் போரிட்டுவந்தன.

வியட்மின் சுதந்திரப் படை வெற்றிமேல வெற்றி பெற்றுக் கொண்டிருந்தது; பிரெஞ்சுப் படை தோல்விமேல் தோல்வி கண்டுகொண்டு வந்தது. இந்தப் போர்க்களச் செய்தி, பிரான்ஸ் மக்களிடம் பெரியதோர் ஏமாற்றத்தைத் தந்துவிட்டது. எனவே, பிரெஞ்சு சர்க்காரை நடத்திவந்த லேனியல் அமைச்சர் குழுவை, பிரெஞ்சு மக்கள்சபை விரட்டி அடித்துவிட்டது.

இதுவுமல்லாமல், வியட்நாம் களத்தில் டாக்டர் ஹோ-சி-மின் விடுதலைப் படையினருக்குக் கிடைத்து வந்த வெற்றி, ஜெனிவா மாநாட்டில் கலந்து கொண்டிருந்த கம்யூனிஸ்டு பிரதிநிதிகளுக்கு தம் விருப்பம்போல் நிபந்தனை விதிக்கும் உறுதியையும், வன்மையையும் பெற துணை செய்தது. அது போலவே, அமெரிக்க, பிரெஞ்சு பிரதிநிதிகளுக்கும் சஞ்சலத்தைக் கொடுத்து வந்தது.

கொரியா விஷயமாக மாநாடு சீர்குலைந்தது போலத்தான், இந்தோ-சீன விஷயத்திலும் மாநாடு முறிந்துவிடும் என்ற நிலை உறுதியாகி விடும்போல் தெரிய வந்தது. அத்தகு முறிவு ஏற்பட்டுவிடாதபடி கடைசி நிமிஷத்தில், நல் சீனப் பிரதிநிதி காப்பாற்றினார்.

சீனப் பிரதிநிதியின் யோசனை, உடனடியாக முறிந்து விடவிருந்து ஜெனிவா மாநாட்டைக் காப்பாற்றி இருக்கிறது என்பது உண்மைதான்; ஆனால், அதற்கு மேலும், அதாவது இந்தோ—சீனாவில் நிரந்தரமான சமாதானத்தைத் தோற்றுவிப்பதற்கான ஒரு உடன்பாட்டைக் காண, சீனாவின் புதிய யோசனை உதவி செய்யுமா என்பதில், முடிவு கட்டுவது அவ்வளவு சுலபமாகயில்லை.

ஒன்று மட்டும் நிச்சயம்—அதாவது, இந்தோ-சீன விவகாரத்தை முன்தள்ளி, மீண்டும் ஒரு உலகப் போர் மூளுமோ என்ற அச்சத்திற்கு இப்பொழுது இடமில்லை. அத்தகைய நிலை ஏற்படுவது, தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பது, சீன யோசனையால், உடனடியாக முனைந்த நற்பலனாகும்.

இந்தோ - சீனாவில் நடைபெற்று வரும் வியட்மின் விடுதலைப் போர், பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியின் எதிரொலியேயாகும். பிரெஞ்சு ஏகாதிபத்தியம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் போலவே, சென்ற பெரும் போருக்குப் பிறகு நல்லறிவு பெற்று, கால மாறுதலையும், மக்கள் மனப்போக்கையும் கண்டறிந்து, இந்தோ - சீனாவின் இருந்த தனது அரசியல் ஆதிக்கத்தை அறுத்து எறிந்து கொண்டிருக்க வேண்டும். அப்படி செய்ய பிரெஞ்சு ஏகாதிபத்தியம் முன்வந்து இருக்குமானால், தன்னிடம் நல அதிகமான நட்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிற இந்தோ-சீனாவை, பிரான்சு துணைவாகப் பெற்றிருக்க முடியும்.

அதற்கான வாய்ப்பு பிரான்சுக்கு ஏற்படாமலும் போகவில்லை. 1946-ல், வியட்மின் விடுதலைப் படையை நடத்தி வரும் டாக்டர் ஹோ-சி-மின், வியட்நாம் சுயேச்சையை ஏற்றுக்கொண்டு, மற்ற இரு பிரதேசங்களோடு கூட்டாட்சி அமைத்து, பிரெஞ்சு யூனியனில் இணைந்த இந்தோ-சீன ஏற்பாட்டுக்கு இணைந்தார். ஆனால் பிரான்சோ, அந்த ஏற்பாட்டுக்கு ஒப்புவதுபோல் பாசாங்கு செய்து, வியட்நாம் சுதந்திரத்திற்கு எதிராக பவோ-டாய் பொம்மை சர்க்காரை உருவாக்கி, டாக்டர் ஹோவை மோதுக் கலைத்தது.

இந்தோ—சீனாவில் இன்று நடைபெறும் போராட்டம், பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து ஒரு குடியேற்ற நாடு விடுபட மேற்கொள்ளும், நாட்டு விடுதலைப் போரல்ல என பிரான்சு கூறுவது கருதத் தக்கதுதான். இருந்தாலும், நாட்டு விடுதலை வேட்கை, அப்போரில் கலந்து இருக்கவில்லை என ஒரேயடியாகச் சொல்லிவிடுவதற்கில்லை. நாட்டு விடுதலை கோரிக்கை, அப்போராட்டத்தில் ஊடுருவி இருந்தபோதிலும், அதைக் காட்டிலும் சிறப்பான அம்சமும் இருக்கத்தான் இருக்கிறது.

ஜெனிவா மாநாட்டில் வெற்றி கிட்டினால், லாவோவும், கம்போடியாவும் மேலும் சில காலத்திற்கு பிரான்சின் அரவணைப்பில் இருக்கும் நிலை ஏற்படக் கூடும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே. அந்த நிலையை நிரந்தரமானது எனக் கொள்ளக் கூடாது; அந்நிலை விரும்பக்கூடியதுமாகாது. மூன்றாவது உலகப் போர் மூளுவதை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைத்தான், மேற்கூறிய ஏற்பாடு எடுத்துக் காட்டுகிறது.

கம்யூனிஸ்டு சீனாவில் முதலாளிகளுக்கு இடமுண்டு

புதிய அரசியல் சட்டம் தரும் உரிமைகள்

கம்யூனிஸ்டு சீனாவின் அரசியல் சட்டத்தில் முதலாளிகள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

2,00,000 வார்த்தைகள் கொண்ட சீன அரசியல் சட்டம் நாடெங்கும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கூடும் தேசிய மக்கள் சபையில் இந்த அரசியல் சட்டம் விவாதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்படவேண்டும்.

விவசாயத்தில் நிலம் வைத்துக் கொள்ளும் உரிமையும், சட்டபூர்வமான வருமானங்களுக்குப் பாதுகாப்பும், பரம்பரைச் சொத்துக்களைப் பெற உரிமையும் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கப் பாதுகாப்பிற்கு ...

13,879 கோடி ரூபாய்கள் செலவா?

அமெரிக்க செனட் சபை, பாதுகாப்புச் செலவிற்காக 29,217,106,486 டாலர்களை (சுமார் 13,879 கோடி ரூபாய்) ஒதுக்கிற்று.

இந்தத் தொகையைக் காட்டிலும் இன்னும் 35 கோடி டாலர் (166 3 கோடி ரூபாய்) அதிகமாக, பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கவேண்டுமென்று சிலர் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியுற்றது.

ஜனநாயகக் கட்சி செனட்டர்கள், ராணுவத்தின் இரண்டு பிரிவைக் குறைத்துவிட வேண்டுமென்றனர்.

இது மக்கள் சபையின் விவாதத்திற்குச் செல்கிறது.

இப்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகை, ஐஸனோவர் ...

ஆச்சாரியார் ஆட்சியில் பள்ளி மூடு விழா!

அவர் தொகுதியிலும் திறப்பு விழா!

திருச்சி, ஜூன் 18—

“இராசகோபாலாச்சாரியின் கல்வித் திட்டம் காரணமாக என்னுடைய பள்ளிக்கூடத்தை மூட இருந்தேன்; ஆனால் காமராசர் அதை இப்போது ரத்து செய்துவிட்டார். ஆகவே பள்ளிக்கூடம் தொடர்ந்து நடைபெறுகிறது; சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் அதிக பிள்ளைகள் சேர்ந்திருக்கிறார்கள்,”

என்று சென்னை கல்வி அமைச்சர் சுப்பிரமணியத்தின் சிறப்பு பாயசன சித்பவானந்தா அறிவித்தார்

திருப்பராய் துறையில் விவேகானந்தா வித்யாலய ஆரம்பப் பாடசாலை என்ற பள்ளிக்கூடமொன்றை சித்பவானந்தா நடத்துகிறார்.

ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வித் திட்டத்தின் விளைவாக பிள்ளைகள் மூன்று மணி நேரம் படித்துவிட்டு மீதி நேரத்தில் பயன்படும் வேலைகள் எதையும் செய்யாமல் சுற்றித் திரிந்தனர் என்றும், அந்தத் திட்டத்தின் காரணமாக கால நஷ்டமும் பொருள் நஷ்டமும் ஏற்பட்டதால் பள்ளிக்கூடத்தை 31—5—54-ல், மூட இருப்பதாகவும், கல்வி அதிகாரிக்கு எழுதிய கடிதமொன்றில் சித்பவானந்தா கூறியிருந்தார் என்று தெரிகிறது.

அமெரிக்க சீன மொழி பத்திரிகைக்கு அபராதம்!

உரிமையாளர்களுக்கு சிறைவாசம்!

சீனாவிற்குப் பணமனுப்பத் தூண்டியதே காரணம்!

‘சைனா டெய்லி நியூஸ்’ என்ற பெயரில், சீன மொழி தினஇதழ் ஒன்றை, சீனர்கள், நியூயார்க்கில் நடத்தி வருகின்றனர்.

அப்பத்திரிகையில், அமெரிக்காவில் உள்ள சீனர்கள், சீனாவிற்குப் பணம் அனுப்ப முன்வர வேண்டும் எனத் தூண்டுதலாக எழுதினதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது: வழக்கும் தொடரப்பட்டது.

அதற்காக, 25,000 டாலர் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது அப்பத்திரிகைக்கு.

அதனுடைய உரிமையாளர்களில் ஒருவருக்கு 2 வருஷ சிறை தண்டனையும், மற்றும் இருவருக்கு ஓராண்டு காவல் தண்டனையும், வேறு ஒருவருக்கு ஒரு வருஷ தண்டனையும் தரப்பட்டுள்ளன.

ஒருவர் தண்டனையை மட்டும், தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தவறு செய்தால், அத்தண்டனையை அவர் அனுபவித்தாக வேண்டி வரும்.

ஒரு பெண்ணின் விலை 10 பவுன்!

லட்சக்கணக்கான அடிமைகள் இன்றும் உள்ளனர்!

பிரிட்டிஷ் அடிமை ஒழிப்புச் சங்கத்தின் வருடாந்திர கூட்டத்தில பேசுகையில் அந்தச் சங்கத்தின் செயலாளரான தோழர் கிரீனிட்ஜ் என்பவர், இன்னமும் உலகத்தில் 120 லட்சம் அடிமைகள் இருப்பதாக அறிவித்தார்.

இந்த அடிமை எண்ணிக்கையில், சுமார் 600 லட்சம் ஆப்பிரிக்கப் பெண்கள் சேர்க்கப்படவில்லை. அந்தப் பெண்களின் பெற்றோர்களிடமிருந்து அப்பெண்களின் கணவர்களால் விலைக்கு வாங்கப்பட்டு, வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் போன்று உபயோகிக்கப்படுகின்றனர்—அந்த 600 லட்சம் ஆப்பிரிக்கப் பெண்களும்!

சுமார் 5 லட்சம் அடிமைகள் ஏமென், சவூதி அரேபியா, ஓமான் ஆகிய தீபகற்பத்தில் காணப்படுகின்றனர். இப்பொழுது அந்த அடிமைகளின் விலை, தலைக்கு 10 பவுன்கள் ஆகும்.

ஐசன்ஹோவர் போர்சு செய்தி திருத்தைக் காட்டிலும் நூறுகணக்கான லட்சம டாலர்கள் குறைவானதாம்.

சென்ற வருடம் அமெரிக்க காங்கிரஸ் அனுமதித்த தொகையைக் காட்டிலும் 50 லட்சம் டாலர் குறைவானதாம் இந்த பாதுகாப்புச் செலவுத் தொகை.

★

வெற்றி விழா

கோடம்பாக்கம்.

35-வது வட்ட தி.மு.க கிளைக் கழகத்தில 13—6—54 மாலை 6 மணிக்கு தோழர் இறையரசு தலைமையில் புதிய கல்வித்திட்டஒழிப்பு வெற்றி விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் க. இளங்கீரன், சா. கணேசன், சே. கிருட்டினமூர்த்தி, அ. சே. ச. துரைக்கண்ணு, அருட்சிவவர்மன், இளவழகனார், கோபாலகிருட்டினன் (பார்ப்பனர்) ஆகியோர் பேசினர். பிறகு, இராமலிங்க அறநெறி பள்ளி ஆசிரியர் இளவழகனார் தலைமையில் திரு. வி. க. பள்ளி சிறுவர்களுக்கு வெண்பொங்கலும், மாங்கனியும் வழங்கப்பட்டன.

சிந்தாதிரிப்பேட்டை

20—5—54ல், புதிய கல்வித் திட்டம் ஒழிந்ததை முன்னிட்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை மார்க்கெட் மருந்துக் கடையில் தோழர்கள் எம். முருகேசன், டி. ஆறுமுகம் அவர்களால் வெற்றி விழா கொண்டாடப்பட்டது சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

செல்லப்பம்பட்டி

11—6—54ல், தி. மு. கழகச் சார்பில், புதிய கல்வித் திட்ட ஒழிப்பு குறித்து தோழர் எஸ். எம். ரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அங்கமுத்து, முத்துகிருஷ்ணன் பேசினர். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சங்கிலிபட்டி

30—5—54ல், முத்தாலம்மன் கோயில் தோழர் இரா. தங்கவேல் தலைமையில் புதிய கல்வித் திட்ட ஒழிப்பு வெற்றிவிழா நடைபெற்றது. தோழர்கள் ப. நாராயணன், கே. ஏ. கிருட்டினசாமி பேசினர்; சிறுவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அண்ணாமலைநகர்

10—6—54ல், தி. மு. கழகச் சார்பில், புதிய கல்வித் திட்ட ஒழிப்பு விழாவை முன்னிட்டு, தோழர் எஸ். இராமு தலைமையில் ஆதார ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது தோழர் மு ஆறுமுகம் சொற்பொழிவாற்றினார். அதுபோல் மாலை மீனாட்சி ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு தோழர் இராமகிருட்டினன் தலைமையில் இனிப்பு வழங்கப்பட்டது. தோழர்கள் டி. என். நாராயணசாமி, என். கிருஷ்ணன் பேசினர்.

கழகச் செய்திகள்

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகம்

12—6—54ல் சென்னை 3வது வட்ட தி. மு. க. கிளை பொது உறுப்பினர் கூட்டம் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது, செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: பி. சி. நரசிம்மலு; துணைச் செயலாளர்: எம். குப்புராசு; பொருளாளர்: டி. என். வேலன்; மாவட்டப் பிரதிநிதிகள்; டி எம். பாண்டியன், எம். குப்புராசு; செயற் குழு உறுப்பினர்கள்: என். சடைமுத்து, எம். எம். மாரியப்பன், பி கே. ராமசாமி, என். ஞானதேசிகன, வி. கே. பொன்னுசாமி, அமிர்தநாயகம், எம். சண்முகம, எஸ். தங்கபாண்டியன், ந. ராமசாமி, பி என். மாயாண்டி, என். டி. என். மூர்த்தி, எம். நாராயணசாமி, என். கோவிந்தசாமி.

சைதை தி. மு. கழகம்

10—6—54ல் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில் தோழர்கள் செங்குட்டுவன செயலாளராகவும், இரத்தினவேலு துணைச் செயலாளராகவும், இராஜவேலு மாவட்டப் பிரதிநிதியாகவும தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அண்ணாமலை நகர் தி. மு. கழகம்

1—6—54ல், செல்வம் வைசக்கின் நிலையத்தில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: நா. சின்னையன்; துணைச் செயலாளர்: என். கோவிந்து; பொருளாளர்: என். இராமகிருட்டிணன்; மாவட்டப் பிரதிநிதி: வி இராமமூர்த்தி; விளம்பர உறுப்பினர்: மு. கோவிந்து; செயற்குழு உறுப்பினர்கள்: என் வைத்தியநாதன், டி. கண்ணன், டி. ஏ மூர்த்தி, என். முத்து, இராமன், மு ஆறுமுகம்.

பம்பாய் கொலாபா தி. மு. கழகம்

4—6—54ல் தோழர் ஜி என். தாஸ் தலைமையில், கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. செயலாளர் தோழர் கே. கே. இராமநாதன் தாயகம் செல்வதால் தற்காலிக செயலாளராக தோழர் என். பி. பெருமாள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தோழர் கே. கே. ராமநாதன் அவர்கட்கு 6—6—54ல் ஆஸ்டோரியா ஓட்டலில் ஓர் பிரிவு உபசாரக் கூட்டம் தோழர் ஆர். ஜி. ஜார்ஜ் தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் பாராட்டுரை வழங்கியபின், கழகச் சார்பிலும் தோழர்களாலும் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருப்பாபுலியூர் தி.மு.க.

3—6—54 இரவு 10 மணிக்கு உறுப்பினர்கள் கூட்டம் தோழர் இரே. இளம்வழுதி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் ஏ. கோவிந்தன் செயலாளராகவும், எஸ். இராமமூர்த்தி துணைச் செயலாளராகவும், மு. பழனி பொருளாளராகவும், எம் சாமி மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக சி. என். தம்பிதுரை, ஆர். சுந்தரம், எம்.சி, இரே. இராமாநுசம், உ [illegible]சாமி, ம. சுப்பையா, அப் [illegible] ரசு, தண்டபாணி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை 50-வது வட்டம் தி. மு. க. திறப்பு விழா

6—6—54 காலை தோழர் திருநாதன் அவர்கள் கொடியேற்றிவைத்தார். புதிய கல்வித் திட்ட ஒழிப்புக்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் வகையில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மாலை 6 மணிக்கு தோழியர் அலமேலு-அப்பாதுரை தலைமையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் தி. மு கழகத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் கண்ணதாசன், மூகவை ஆர். எஸ். பாண்டியன், பொன். கு. கோதண்டபாணி ஆகியோர் பேசினர். முடிவில் தோழர் குமரவேல் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உத்தமபுரம் (கம்பம்) தி. மு. க. கிளை துவக்கம்

8—6—54ல் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் பி. கே. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றபோது, புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-செயலாளர்: பொ. சு. வாமன்; துணைச் செயலாளர்: எம் பொன்னையா; பொருளாளர்: டி. பி. ஆர். சாமி; துணைப் பொருளாளர்: எம். வீரணன்; விளம்பர உறுப்பினர்கள்: கே. நிலக்தரு பாண்டியன், எம். எம். மாயன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக 15 பேரும தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேவூர் (வ. ஆ.) தி. மு. க.

4-ம் ஆண்டு நிறைவு விழா

11—6—54 மாலை 6 மணிக்கு குளக்கரை எதிரில் அமைந்த லால்குடி நடராசன் அரங்கில் தோழர் வே முருகேசன் இன்னிசையோடு விழா துவங்கியது. விழாவைத் துவக்கி வைத்து தோழியர் அருள்மொழி 'யார் தெய்வங்கள்?' என்பது பற்றி விரிவுரையாற்றினார். பின்னர் தோழர் பேரூர் கே. சுப்ரமண்யம் முன்னுரை நிகழ்த்த, தோழர் என். வி. நடராசன் 'அரசியலிலே நாம்' என்பது பற்றியும், தோழர் கண்ணதாசன் 'துரோகிகள்' என்பது பற்றியும் பேசினர். பின்னர் செயலாளர் செயராமன் ஆண்டு அறிக்கை வாசித்தார்; என். ஏ. கணேசன் நன்றி கூறினார். இரவு 11 மணிக்கு செங்கரடு செந்தமிழ் மன்றத்தினரால் "அன்பின் வெற்றி" என்ற நாடகம் நடைபெற்றது.

பனங்குளம் தி. மு. க. 2-ம் ஆண்டு விழா

3—6—54-ல் கழக ஆண்டு விழா தோழர் ம. ரா. மணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். ராஜேந்திரன், என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசினர்.

மாயூரம் வட்ட தி. மு. க.

30—5—54ல், தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் என். சிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, ஜூலை மாத முதல் வாரத்தில் சிற்றுணி சுப்பிரமணியம் குழுவினரின் கலை நிகழ்ச்சியை சிற்றூர்களில் நடத்த ஏற்பாடுகள் செய்வதெனவும், அமைச்சர் எம். என். ராமசாமியின் போக்கைக் கண்டித்தும், புதிய கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்ற முதன் மந்திரி காமராசரைப் பாராட்டியும், மற்றும் பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

செங்குன்றம் தி. மு. க.

ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

6—6—54 மாலை தோழர் அ. பெரியசாமி தலைமையில் கழகச் சார்பில், ஊர்வலம் புறப்பட்டு அண்ணா திடல் வந்தடைந்தது.

தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி கழகக் கொடி ஏற்றிவைத்தார்.

தோழர் பிச்சை தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. முனுசாமி, பாலகுரு இயக்கப் பாடல்கள் பாடினர்.

செயலாளர் தோழர் க. குருசாமி கடந்த ஆண்டில் சாதித்தவைகளையும், இனி செய்யப் போவதையும் பற்றி பேசினார்.

பின்னர் தோழர் இரத்தினம் திராவிட நாடு பிரியவேண்டியதன் அவசியம் பற்றி பல ஆதாரங்களோடு பேசினார்.

அடுத்து தோழர் மு. தயாநிதி நேருவின் பேச்சுக்கு ஆணித்தரமான பதிலளித்துப் பேசினார்.

பின்னர் தோழர் அ. பெரியசாமி இளைஞர்கள் தி. மு. கழகத்தில் சேருமபடி அன்பழைப்பு விடுத்துப் பேசினார்.

அடுத்துத் தோழர் மதுரை மன்னன் மும்முனைப் போராட்டங்களில் காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறையை விளக்கிக் கண்டித்தும, அவ்வூரிலுள்ள பள்ளியின் கூரை பாழ்பட்டிருக்க மாரியாத்தாள் கோவிலுக்குக் கோபுரம் கட்டுவது சரியல்ல என்பதையும் பல மேற்கோள்கள் காட்டி விளக்கிப் பேசினார்.

கடைசியாக தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுகையில், மக்களிடம் குடிகொண்டிருக்கும் மத மயக்கத்தைப் போக்கவே தி. மு. கழகம் பட்டிதொட்டிகளெல்லாம பிரசாரம் செய்கிறதே அல்லாது மடாதிபதிகளைப்போல காணிக்கை பெற அல்ல என்றும், சமுதாய சீர்திருத்தம் பற்றி விளக்கியும் விரிவுரையாற்றினார்.

★

கோகூர் தி. மு. கழகம்

மூன்றாவது ஆண்டு விழாவும் பொதுக்கூட்டமும்

12—6—54 மாலை 6 மணிக்கு தோழர் பொ. கோதண்டராமன அவர்கள் தலைமையில திரு. வி. க. திடலில, விழா நடைபெற்றது. தோழர்கள் ஆர். ஜெயச்சந்திரன், என் எம். வைத்திலிங்கம், ஆர். தேவராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

திருவில்லிபுத்தூர்

13—6—54ல், தி. மு. கழகச் சார்பில தோழர் மா. குருசாமி தலைமையில, காயர் சதுக்கத்தில ஒரு பொதுக் கூட்டம நடைபெற்றது. தோழர்கள மதுரை வே. சௌந்திரராசன், இரா. பாலகிருட்டினன் சொற்பொழிவாற்றினர்.

அம்மாபேட்டை

15—6—54 மாலை 6 மணிக்கு, கழகச் சார்பில், பெரியவீரப்பச் செட்டித் தெருவில், தோழர் தனசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழக இலட்சியங்கள் குறித்து விரிவுரையாற்றினார். முக்கிய தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

★

மேட்டுப்பாளையம்

12—6—54 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு மு. நா. மேட்டுப்பாளையம் நகராட்சி மைதானத்தில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் கா. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஈ.வெ.கே. சம்பத், என். அப்பாவு, மு வெ. முத்துக் கருப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

திருப்பரங்குன்றம்

மதுரைக்கடுத்த திருப்பரங்குன்றம் தி. மு. கழக உட்கிளையான திராவிடர் பகுத்தறிவு மன்றச் சார்பில் 14—6—54 மாலை 6-30 மணிக்கு பஸ் நிலையத்தின் எதிர்புறத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை தோழர் எஸ. முத்து தலைமை தாங்கினார். தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், திராவிட நாட்டுப் பிரிவினையை எதிர்ப்போருக்கு சரித்திர ஆதாரங்களோடு தக்க பதிலளித்தும் புதுக்கல்வித் திட்டத்தை எதிர்த்ததின் நோக்கத்தைப் பற்றியும், இந்தியப் பிரதமர் நேரு திராவிட இயக்கத்தவரை இழித்துப் பேசியதைக் கண்டித்தும் விரிவுரையாற்றினார். கூட்டத்தில் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். தோழியர்கள் மீரா—சப்பு இருவரும் இயக்கப் பாடல்கள் பாடினர்.

★

நெடுங்குளம்

6—6—54ல், தி மு. கழகச் சார்பில், தோழர் முகம்மது இப்ராகிம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் வை. சிவம், த. நாகராசன், கிருட்டிணமூர்த்தி, வைத்திலிங்கம், கு. அடைக்கலம், எம். என். மணி, என். எஸ். இளங்கோ, மு கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

கோவில்பட்டி

6—6—54ல் இவ்வூர் கோவில் மேட்டில், இரவு 7 மணியளவில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் விருதை என். பி. சிவன், எட்டயாபுரம் என். கலிங்கன், விக்கிரமசிங்கபுரம் கந்தசாமி, அத்துக்குடி தோழர் கே வி. கே. சாமி ஆகியோர் நமது கழகக் குறிக்கோள் பற்றி விரிவுரையாற்றினர்.

திருமேனியார்கோயில்

14—6—54 மாலை 6-30 மணிக்கு மாயூரம் வட்டம் திருமேனியார்கோவில் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் தோழர் என். சிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். சண்முகம், ஷேக்தாவூத், ம. கோ. மணி, பொ. தருமன் ஆகியோர் பேசியபின் தோழர் என். வி. நடராசன் நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்தும், கம்யூனிஸ்டுகளின் பொய்ப் பிரசாரம் குறித்து சொற்பொழிவாற்றினார்.

★

காவிரிப்பூம்பட்டினம்

15—6—54 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் கடைவீதியில் தோழர் கணேசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் என். வி. நடராசன், என். சிட்டப்பா, கே. எஸ். சௌந்தரராசன், ஒலி ஆகியோர் தி. மு. கழகத்தின் கொள்கை பற்றியும், வடநாட்டின் பிடிப்பிலிருந்து தென்னாடு மீளவேண்டிய அவசியம் குறித்தும், கம்யூனிஸ்டுகளின் போக்கு குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

★

இளையமதுகூடம்

16—6—54 மாலை, இளையமதுகூடம் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம்தோழர் டி. வி. சம்பத் தலைமையில் நடைபெற்றது. தோழர் கே. எஸ். சௌந்தரராசன் சமுதாய இழிநிலையைப் போக்கவேண்டிய அவசியம் குறித்தும், தோழர் என். சிட்டப்பா நாட்டுப் பிரிவினையின் அவசியம் பற்றியும், தோழர் என். வி. நடராசன் இன்றைய அரசியல் நிலை பற்றியும், கம்யூனிஸ்டுகளின் போக்கைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

★

அறந்தாங்கி

13—6—54 மாலை 6 மணிக்கு வ. உ. சி. திடலில் தி. மு. கழக சார்பில், திருச்சி நெடுமாறன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர், திருக்குறளில் பொதுவுடைமை இருப்பதை விளக்கிப் பேசினார்.

பின்னர், தோழர் செ. பி. சிற்றரசு பேசுகையில் மாறுபட்ட அரசியல் கட்சிகளிலே கருத்து வேறுபாடுகள் இருப்பது இயற்கையென்றும், அவர்கள் மாறுபட்ட கருத்தைத் தாக்கும் போது நாகரீகம் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

டால்மியாபுரம் பெயர் மாற்றம் பற்றி பேசும்போது, ரஷிய நாட்டில் வில்லியம் மேரி என்ற பெயரை ரஷிய மக்கள், எவ்வளவு அவமானமாகக் கருதி சட்ட பூர்வமாக தடை செய்திருக்கிறார்களோ அதே நிலையில் தான் டால்மியாவின் பெயரை அகற்ற திராவிட மக்கள் விரும்புவதாகக் கூறினார்.

திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. க.

நெடும்பலம், ஜூன் 15—

10—6—54 மாலை 6 மணிக்கு திருத்துறைப்பூண்டி தாலுக்கா தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நெடும்பலத்தில் தோழர் கோ. பெருமாள் தலைமையில் நடைபெற்றது. வட்டக் கழக அமைப்பின் அவசியம் பற்றி தோழர் டி. என் கல்யாணசுந்தரம் பேசியபின், வட்டக் குழு செயலாளராக தோழர் டி. என. கல்யாணசுந்தரமும், துணைச் செயலாளராக கோ. பெருமாளும், வட்டக் குழு சார்பில் மாவட்டப் பிரதிநிதியாக இரா. லெட்சுமணனும், தேர்ந்தெடுக்கப்பட்டனர் பின்னர், புதிய கல்வி திட்டத்தை வாபஸ் பெற்றதற்காக முதல் அமைச்சர் காமராசரைப் பாராட்டியும், சிற்றுணி சுப்பிரமணியம் குழுவினரின் கலை நிகழ்ச்சியை தாலுகா பூராவிலும் வட்டக் குழுவின் சார்பில் நடத்துவதெனவும்; காலஞ்சென்ற என். ஆர். சாமியப்பா, என். சங்கரன், அருப்புக்கோட்டை முத்து, வட சென்னை, பி. ராமசாமி, வி. வி. தனுஷ்கோடி, தஞ்சை ஏ ஒய்.ஏ. நாடார், மணப்பாறை குமரவேல் ஆகியோர் மறைவுக்கு வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

செயலாளர்களுக்கு வேண்டுகோள்

"10—6—54ல், நெடும்பலத்தில் அமைக்கப்பட்ட வட்டக் குழு கூட்டத்தில செய்த தீர்மானத்தின்படி அடுத்த கமிட்டிக் கூட்டத்திற்கு இணையாத மன்றங்களையும் வட்டக் குழுவில் இணைக்க வேண்டி இருப்பதால் அமைப்புக் கூட்டத்தில் பங்கு பெறாத கிளைக் கழகங்களின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட கிளைகளிலிருந்து வரும் பிரதிநிதிகளின் பெயர், முகவரி முதலியவைகளை 'டி. என். கல்யாணசுந்தரம், திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழக செயலாளர் நெடும்பலம், நெடும்பலம் அஞ்சல்' என்ற முகவரிக்கு எழுதவேண்டுமாய் கேட்டுக் கொள்வதோடு, வட்டத்திலுள்ள கிளைக் கழகங்களின் உறுப்பினர் தொகை உறுப்பினர் ஒன்றுக்கு ஓரணா வீதம் வட்டக் கமிட்டிக்குச் சேரவேண்டிய பணம் முதலியவைகளையும் ஜூன் மாத இறுதிக்குள் அனுப்பி உதவவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என திருத்துறைப்பூண்டி வட்டம் தி. மு. க செயலாளர் டி.என். கல்யாணசுந்தரம் கோருகிறார்.

உலக அரங்கில்

மணிலா :

பிலிப்பைன் தீவுகளில் அன்னியர்கள் கடைகள் வைத்து வியாபாரம் செய்வதைத் தடை செய்யும் சட்டமொன்றை பிலிப்பைன் சர்க்கார் தலைவர் அமுலுக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

★

வர்ஜீனியா :

சோவியத் நாட்டிற்கும், அமெரிக்காவிற்கும் போர்த்தளவாட உற்பத்தியில் அதிக வேற்றுமை இருக்காதென்றும், அப்படிக் காணப்படும் வேற்றுமைகள் மிகவும் சொற்பமே என்றும், அமெரிக்கப் பாதுகாப்பிலாகா உதவி செயலாளர் கூறினார்.

★

வாஷிங்டன் :

செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட ரப்பருக்கு உலகெங்கும் அதிகமான தேவையாயிருக்கிறது என்று அமெரிக்கப் புனரமைப்புப் பொருளாதார கார்ப்பரேஷன் அறிவித்திருக்கிறது.

★

கெய்ரோ :

எகிப்தின் பிரதமர் நாசீர் மெக்காவுக்கு யாத்திரை செல்வார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. அதே நேரத்தில் சவூதி அரேபிய மன்னருடன் அரசியல் நிலைமையும் கலந்து பேசுவார் என்று தெரிகிறது.

★

கேப்டவுன்:

தென் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மக்களை தென் ஆப்பிரிக்க உள்விவகார இலாகாவின் கீழ் கொண்டுவரும் மசோதா ஒன்று பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தென் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ளவர்களைக் கட்டாய வேலைக்குப் பயன்படுத்த முடியுமென்று தெரிகிறது.

★

ஜினீவா :

யூகோஸ்லாவாகியா செல்லும் வழியில் திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஜினீவா வந்து சேர்ந்தார்.

★

தென்சாஸ் நகரம் :

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ருமனுக்கு ஆபரேஷன் ஒன்று நடைபெற்றது என்றும், அவர் நலமாக இருக்கிறார் என்றும் தெரிகிறது.

★

நைரோபி :

கலகக்காரர்கள் ஐரோப்பிய அதிகாரி ஒருவரைக் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று தெரிகிறது. அவர்கள் ஐரோப்பியர் கடை ஒன்றையும் தாக்கினார்களாம்.

★

பாரிஸ் :

ஐ. நா. சபையின் கல்வி கலாசாரக் குழுவிலிருந்து போலந்து விலகுவதென்று 1952-ல் செய்திருந்த முடிவை இப்போது மாற்றிக் கொண்டுவிட்டதாம். குழுவில் நீடித்திருப்பதாக போலந்து சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

★

பெய்ரூத் :

அமெரிக்கா, லெபனானுக்கு இந்த ஜூன் 30-ந் தேதியுடன் முடிவடையும் ஆண்டிற்கு ஆக பத்தியன் டாலர் உதவி அளிப்பதென்று தீர்மானித்தது. நான்கு அம்ச திட்டத்தின்கீழ் இந்த உதவி அளிக்கப்படுகிறது.

★

ஜெருசலம் :

இஸ்ரேல் - ஜோர்டன் எல்லைத் தகராறுகளைத் தீர்க்கும் முறையில் ஐ. நா. சமாதானப் பார்வையாளர் குழுவை புனரமைக்க வேண்டுமென்று அமெரிக்காவும், பிரிட்டனும் தெரிவித்திருக்கின்றன.

ஜார்ஜ்டவுன் :

குவாடிமாலாவில் நடைபெறும் கிளர்ச்சி வலுவடைந்தால் பிரிட்டிஷ் கயானாவைச் சேர்ந்த அட்கின் சன் என்னுமிடத்தில் அமெரிக்கா ஒரு இராணுவ தளம் ஒன்றை அமைக்குமென்று தெரிகிறது.

★

டமாஸ்கஸ் :

சிரியாவில் நடைபெறப் போகும் தேர்தலை மேற்பார்வையிட காபந்து சர்க்கார் ஒன்றை சையதுகாசி என்பவர் அமைத்திருக்கிறார்.

★

சைகோன் :

வியட்மினில் போராடும் பிரெஞ்சுப் படைகளுக்கு உதவும் பொருட்டு இரண்டு பிரெஞ்சு போர்க் கப்பல்கள் சைகோனுக்கு அருகில் உள்ள நதி ஒன்றில் வந்திருக்கிறது என்று தெரிகிறது.

★

கசபிளாங்கா :

மூமைது பென்சேர்டோ என்னும் மொராக்கோ கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களில் ஒருவர் சிறையில் தற்கொலை செய்து கொண்டு மாண்டார் என்று போலீசார் அறிவித்தனர்.

★

மாராகேஷ் :

மொராக்கோ பிரெஞ்சுத் தளபதிகளில் ஒருவரான டாக்டர் டிலிலி என்பவர் சிலரால் ஒன்றில் சுடப்பட்டார் என்றும், அவர் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது.

★

லண்டன் :

எம். ஆர். ஏ. அமைப்பு, உலகில் உண்மையான சமாதானத்திற்குப் பாடுபடுமென்றும், இந்திய சுதந்திரமடைந்ததே அதன் வெற்றிக்கு ஒரு உதாரணமென்றும், பம்பாய் மேயர் தயாபாய் பட்டேல் லண்டன் எம். ஆர். ஏ. தலைமைக் கழகத்தில் தனக்களிக்கப்பட்ட வரவேற்பொன்றில் கூறினார்.

* * *

பாகிஸ்தானில் சணல் விலையில் குறைவு ஏற்பட்டிருப்பதை ஒட்டி, பிரிட்டனிலும் சணல் விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

★

டெஹ்ரான் :

ஈரான் எண்ணெய் விற்பனை பற்றி பரிசிய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும், எண்ணெய்க் கிணறுகளின் நிர்வாகம் பற்றிப் பேசவும், அதற்கான குழு ஒன்று லண்டனிலிருந்து டெஹ்ரான் வந்து சேர்ந்திருக்கிறது.

* * *

கலாச்சார உதவித் திட்டத்தின் மூலம், இந்திய சர்க்காரின் அழைப்பின் பேரில் இரண்டு ஈரான் மாணவர்கள் இந்தியாவில் உயர்தரப் படிப்புக்காகச் செல்வார்கள் என்று தெரிகிறது. இதே முறையில் மூன்று இந்திய மாணவர்கள் பரிசியாவில் கல்வி பயில்கின்றனர் என்று தெரிகிறது.

தஞ்சை மாவட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு

ஜூன் 22: ஏனங்குடி
23: அம்மையப்பன்
24: கட்டிமேடு
25: முத்துப்பேட்டை
26: குருவிக்கரம்பை
27: சீயாமங்கலம்
28: திருச்சினப்பூண்டி

ஆய்க்காரம்பலம் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மத்யபாரத்தில் கொள்ளையர் அட்டகாசம்

காங்கிரசார் மீது பலத்த புகார்

மறுப்பு அறிக்கை வெளியிடுகிறார் தலைவர்

இந்தூர், ஜூன் 20 —

மத்திய பாரத்தின் வட பகுதியில் கொள்ளைக்காரர்கள் 11 பேரை சுட்டுக்கொன்றனர் என்றும், மூன்று சௌக்கிதார்களைத் தூக்கிச் சென்றனர் என்று தெரிகிறது.

சென்ற சில நாட்களாக மான் சிங், லக்னன் சிங், அமிர்தலால் ஆகியோர் தலைமையில் கொள்ளைக் கூட்டங்கள் கிராமத்து மக்களைத் தாக்கிக் கொள்ளையிடுகின்றனர் என்று போலீசார் அறிவிக்கின்றனர்.

ஜூன் 16ந் தேதி இவர்கள் நடத்திய தாக்குதலில் ஒரு போலீஸ்காரரும், சௌக்கிதார் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

அடுத்த அக்கிரம வேட்டையில் இரண்டு போலீசாரை மான் சிங்கின் தலைமையில் சுட்டு வீழ்த்தினார்கள் என்று தெரிகிறது.

ஜூன் 18-ல் அமிர்தலாலின் தலைமையில் கொள்ளைக் கூட்டத்தினர் ஆறு கிராமவாசிகளைக் கொன்றனராம்.

கடந்த மூன்று நாட்களாக இவர்கள் அட்டகாசம் எல்லைமீறி விட்டது என்று தெரிகிறது.

இக் கொள்ளைக் கூட்டத்தினருடன் பிண்ட் மொரினா மாவட்டங்களைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்களும், கலந்திருக்கின்றனர் என்று செய்தி ஒன்று தெரிவித்தது.

மத்திய பிரதேச காங்கிரஸ் தலைவர் தக்மால் ஜெயின் இச்செய்தி தவறென்றும், இக்கொள்ளைக் கூட்டத்தினருடன் காங்கிரஸ் ஊழியர்கள் கலந்துகொள்ளவில்லை என்றும் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

கொள்ளைக்காரர்களை அடக்க அந்த இரண்டு மாவட்டங்களில் உள்ள காங்கிரஸ் தோழர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும், ஜெயின் மறுத்திருக்கிறார்.

"சர்க்காருடன் சில சமயங்களில் கருத்து வேற்றுமை காரணமாக ஒத்துழைக்க மறுத்தது உண்மைதான்; அதற்காக, காங்கிரஸ்காரர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்கவேயில்லை என்று கூற முடியாது," என்று அவர் மேலும் கூறினார்.

(சமீபத்தில் இந்தூரில் நடைபெற்ற பி. சோ. கட்சியின் நிர்வாகக் குழு, காங்கிரஸ்காரர்கள் சர்க்காருக்கு எதிராக வேலை செய்கின்றனர் என்று குற்றம் சாட்டியது)

மறையும் மனிதப் பிரிவை காக்க முயற்சி

லட்சக்கணக்கில் செலவிட மே. வங்க திட்டம்

மேற்கு வங்க அரசாங்கம் அபூர்வமான ஒரு வகுப்பினர் அழிந்து படாது பாதுகாப்பதில் தீவிரமாயிருக்கின்றதாம்.

பூட்டான் எல்லைக்கருகில் டோட்டாபூரா என்ற கிராமத்தில் வாழும் 330பேர்களை மட்டும் கொண்ட 'டோடோ' என்ற வகுப்பினர்தாம் அவர்கள். அவர்கள் வாழுமிடத்தினருகில் இருந்த ஆரஞ்சு மரங்கள் பட்டுப் போய் விடவே அவர்களின் வருமானமும் இல்லாது போயிற்று.

மேற்கு வங்க அரசினர் அந்த 'டோடோ'க்களுக்கு இப்போது உணவு, தண்ணீர் முதலிய இன்றியமையாதனவற்றைத் தந்து கொண்டு, அவர்களை தங்கட்குத் தேவையான உணவு தானியங்களைப் பயிரிடுக் கொள்ளவும் பயிற்சியும் தருகிறார்கள் எனத் தெரிகிறது. இவர்களின் வாழ்வுப் பாதுகாப்புக்காக மேற்கு வங்க அரசு இரண்டு ஆண்டுகளில் ரூ. 55 லட்சம் செலவிட திட்டமிட்டுள்ளது மத்திய அரசாங்கம் ரூ 125 லட்சம் தந்துள்ளது. இன்னமும் ரூ 175 லட்சம் தருமாறு மாநில அரசு மத்திய அரசை வேண்டியுள்ளது

பார்வையில்லா இளைஞர்

சட்டப் பரீட்சையில் வெற்றி பெற்றார்

பம்பாய் பல்கலைக் கழகத்தின் சட்டப் பரீட்சையில் ஒரு பார்வையில்லா இளைஞன் தேறிவிட்டார். பம்பாயில் சட்டத்தில் முதல் தடவையாகப் பட்டம் பெறும் பார்வையற்ற ராஜேந்திர சர்மா என்ற இளைஞர் பம்பாய் டாக்டர் ஒருவரின் மகனாவார்.

குனியமுத்தூர் தி. மு. கழகத் தோழர்கட்கு

"4—7—54 ஞாயிறன்று குனியமுத்தூர் தி. மு. கழக ஆண்டு விழாவிற்கு தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு ஆகியோர் வருகை தர இசைந்துள்ளனர். அன்று காலையில் கழகத் தோழர்கள் இல்லந்தோறும் தோழர்கள் சே. அரசமாணிக்கம், கோவை செழியன் ஆகியோரால் கொடிகள் ஏற்றுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, தோழர்கள் அதிக அளவில் கொடிகளை ஏற்றுவிக்கவேண்டும். இதற்கு தங்கள் பெயர்களை 27—6—54க்குள் கழகப் பணிமனையில் அமைச் செயலாளர் தோழர் இரா. கருப்பண்ணனிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும்" என்று செயலாளர் தங்கமாணிக்கம் வேண்டுகிறார்.

பிறப்பு

சோளம்பாளையம் மே. க. கோட்டை தி. மு. கழகப் பொருளாளர் டி. ஆர். கோவிந்தராசனின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் லோகாம்பாள் அவர்களுக்கு 26—5—54ல் ஒரு ஆண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். குழந்தைக்கு "ராஜேந்திரன்" என்று பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ 1 நன்கொடையளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது - பொறுப்பாளர்.

வேதாரண்யத்தில் சிற்றரசு

12—6—54 மாலை 6 மணிக்கு இப் படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் சி பி சிற்றரசு படிப்பகத்தைத் திறந்து வைத்தார்

பின்னர் ராஜாஜி பூங்காவில் தோழர் எஸ். ஏகாம்பரம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜி. இருட்டினன், எஸ். வைத்தினாதன் ஆகியோர் படிப்பகம் அமைக்கப்பட்டதின் அவசியம் குறித்துப் பேசினர். பின்னர் சி பி சிற்றரசு அவர்கள் திராவிடம் பிரியவேண்டிய அவசியம் பற்றியும், படிப்பகத்தைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்வதோடு அது வளர வழிவகுத்துத் தரவேண்டுமென்றும் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

செய்திக்கதிர்

தொழில் மந்தம்

பீகார் ராஜ்யத்தில் உள்ள இரும்பு, மாங்கனீசு சுரங்கங்கள், விலைவாசி குறைவாலும் மார்க்கெட் மந்தத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் 18,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது.

★

பர்மா அரிசி

பம்பாயில் அரிசிப் பங்கீடு ரத்து செய்யப்பட்டதை ஒட்டி, பர்மாவிலிருந்து இறக்குமதியான அரிசியைப் பம்பாயில் விற்பனை செய்வார்கள் என்று தெரிகிறது.

★

விபத்து

குன்றின் உச்சியிலிருந்து 3 டன் எடையுள்ள பாறை ஒன்று உருண்டு மர்மகோவா — லோண்டா பாசஞ்சர் வண்டியின் மீது வீழ்ந்ததால் ஒருவர் மரணமடைந்ததாகவும், ஐவருக்கு பலமாகக் காயம் ஏற்பட்டதென்றும் தெரிகிறது.

★

தொழில் உறவு

நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தொழில் உறவு மசோதாவை மத்திய சர்க்கார் சீக்கிரமே வெளியிடும் என்று தென் இந்திய ரயில்வே ஊழியர் தேசிய சம்மேளனத்தின் பொதுக் காரியதரிசி குருசாமி தெரிவித்தார்.

★

டெலிவிஷன்

டெலிவிஷன் முறையைப் புகுத்தும் திட்டமொன்றை இந்திய சர்க்கார் பரிசீலிக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இது இடம் பெறும் என்று தெரிகிறது.

★

சோதனை

பிரான்சிலிருந்து இந்தோ-சீனா செல்லும் வழியில் டம் டம் விமானத்தில் சுங்க அதிகாரிகளால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று பிரெஞ்சு விமானங்களும் சைகோனுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

★

மாணவர் குழு

சோவியத் நாட்டின் கல்வி முறை மாணவர் நிலையற்றி அறிய இந்திய மாணவர் குழு ஒன்று செப்டம்பரில் ரஷ்யா செல்லும் என்று தெரிகிறது. ஐரோப்பாவில் இசைக் கலைஞர்கள் குழு ஒன்று அனுப்பப்படுமாம்.

★

சலுகை

ஒரே தடவையில் ஐந்து ரூபாய்க்குக் குறைவாகவும் நூறு ரூபாய்க்கு மேற்படாமலும் வைத்தீர்வை அணி வாங்குபவர்களுக்கு ரூபாய்க்கு ஒன்றரை அணா தள்ளுபடி கொடுக்க பம்பாய் சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

ரங்கூன் :

பர்மியப் பிரதமரின் வீட்டருகே நடைபெற்ற அகில பர்மா உழவர்கள் மகாநாடு, நிலங்களனைத்தையும் சர்க்கார் தேசியமயமாக்கி, நிலமில்லாதோருக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

[illegible] கழகத் தோழர் இரா. [illegible] அழகிரி [illegible] அன்னத்துரை, எஸ். [illegible]